# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை

## கிளிநொச்சி மாவட்டம்

**1.** நிதிசார் கூற்றுக்கள்

**1.1** நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 மார்ச் 15 ஆந் திகதியன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஒக்டோபர் 03 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

**1.2 அபிப்பிராயம்**

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, பச்சிலைப்பள்ளி பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

நிதிசார் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான கணக்கீட்டுக் குறைபாடுகள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| | சொத்துக்கள் | | பொறுப்புகள் | |
|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி |
| | | ரூபா | | ரூபா |
| குறைத்துக் கூறல்கள் | 08 | 312,450 | 01 | 255,272 |
| அதிகரித்துக் கூறல் | | | 01 | 13,440 |

**1.3.2** கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கணக்காய்வுக்குத் தகவல்களைச் சமர்ப்பிக்காமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 13,115,877 பெறுமதியுடைய 13 கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின்போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**2.** நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

**2.1** நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிசார் விளைவுகள் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் மிகையாக ரூபா 338,519 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் மிகையாக ரூபா 24,051 விளைந்திருந்தது.

**2.2** நிதிசார் கட்டுப்பாடு

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு வருவாய்க்கும் உண்மை வருவாய்க்கும் இடையே ரூபா 1,821,940 வேறுபாடு ஏற்பட்டதுடன் பாதீட்டுச் செலவினத்திற்கும் உண்மையான செலவினத்திற்கும் இடையே ரூபா 1,713,306 வேறுபாடு ஏற்பட்டமையும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 2.3 வருவாய் நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், நிலுவையாகவுள்ள வருவாய்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், நிலுவையாகவுள்ள வருவாய் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | 2012 | | |
|---|---|---|---|---|
| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
| | | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 |
| (i) | இறைகளும் வரிகளும் | 15 | - | - |
| (ii) | குத்தகை வாடகை | 3,400 | 3,703 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 98 | 218 | - |
| (iv) | வேறு வருவாய் | 16,082 | 14,036 | 956 |

### 2.3.2 வருவாய் இழப்பு

சபையின் எல்லைக்குட்பட்ட ஆதனங்கள் தொடர்பாக ஆதனவரி மதிப்பீடு செய்யப்பட்டு அறவிடப்படாமையால் சபையின் வருவாயில் இழப்பு ஏற்பட்டுள்ளது.

### 2.3.3 முத்திரைக் கட்டணம்

(அ) 2012 ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையான காலப்பகுதியில் பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறப்பட வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 309,550 ஆகும். இதனை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 - 2011 வரையான காலப்பகுதிக்கான முத்திரைக் கட்டணம் ரூபா 425,400 ஆகும். இதனைப் பதிவாளர் நாயகத்திடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4** சொத்துக்களின் முகாமைத்துவம்

**2.4.1** பெற வேண்டிய கணக்குகள்

புறநெகும மூலதன மானிய மீளளிப்புக்கென சபை நிதியில் இருந்து கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 255,272 முற்பணமானது தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.4.2** வாகனப் பாவனை

(அ) சபையின் பாவனையிலுள்ள 08 நான்குசில்லு உழவு இயந்திரங்களுக்கு வாகன அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதிப் பத்திரம் என்பன பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 05 உழவு இயந்திரங்கள் பயன்படுத்தப்படாதிருந்தன.

**2.5 இணக்கமின்மை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (i) 1989 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் (நிதி, நிர்வாக) ஒழுங்கு விதி | |
| அத்தியாயம் II பிரிவு 5 உப பிரிவு XII | காசு, களஞ்சியம் என்பவற்றுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரிடம் பிணைப் பணம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| அத்தியாயம் III பிரிவு 81 | ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் முத்திரைத் தீர்வை மற்றும் நீதிமன்றத் தண்டப் பண மீளளிப்பு சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை |
| (ii) பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 1990 ஒக்டோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | சபையின் வாகனங்களுக்கு எரிபொருள் நுகர்வுப் பரிசீலனை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை |

## 2.6 அறவிடப்படாத வருவாய்

### 2.6.1 தொலைத்தொடர்புக் கோபுரத்துக்கான கட்டணங்கள்

2009.04.17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சபையின் எல்லைக்குள் அமைக்கப்பட்ட டயலொக் தொலைத் தொடர்புக் கோபுரத்துக்கான கட்டணம் அறவீடு செய்யப்படவில்லை.

### 2.6.2 விளம்பரக் கட்டணம் அறவிடப்படாமை

சபையினால் வசந்தம் F.M விளம்பர பதாதைகளுக்கான கட்டணம் அறவீடுசெய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

## 2.7 சொத்துக்களின் முகாமைத்துவம்

### 2.7.1 பயன்படுத்தப்படாத பௌதீகச் சொத்துக்கள்

சபையினது பெயரிலான வங்கிக் கணக்கொன்றில் ரூபா 17,853 கடந்த 04 ஆண்டுகளுக்கு மேலாகப் பயன்படுத்தப்படாது இருந்து வருவது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

### 2.7.2 சபை வாகனத்தை துர்ப்பிரயோகம் செய்தமையால் சபைக்கு ஏற்பட்ட நிதியிழப்பு ரூபா 109,573

சபைக்குச் சொந்தமான பிக்கப் வாகனம் ஒன்றை தலைவர் தனது சொந்தப் பாவனைக்கு வெளி மாவட்டமான வவுனியாவிற்குக் கொண்டு சென்றதுடன் சொந்தப் பாவனைக்காக 2012 ஜனவரி 09 தொடக்கம் மே 25 வரை 7279 கிலோமீற்றர் தூரம் ஓடியதற்கான எரிபொருள் பாவனை 921 லீற்றர் டீசலுக்குச் சபை நிதியிலிருந்து ரூபா 109,572 செலவிடப்பட்டுமிருந்தது.

மேற்குறித்த வாகனத் துர்ப்பிரயோகம் தொடர்பாக பின்வருவன கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) சாரதியின்றி வாகனத்தை தலைவர் 2112 கி.மீ தூரம் பயன்படுத்தியிருந்தார். இதற்கான ஓட்ட அட்டவணைகள் பேணப்படவில்லை.

(ஆ) தவிசாளரின் மேற்படி வாகனத் துர்ப்பிரயோகத்தினால் சபையின் நாளாந்த நடவடிக்கைகள் பெருமளவு பாதிப்படைந்தன.

**2.8 பெற வேண்டிய கணக்குகள்**

அரசிறைக் கடனாளிகள் கணக்கில் ரூபா 63,514 பெறுமதியான அரசிறைக் கடனாளிகள் குறித்த காலப்பகுதியில் அறவிடப்படாது தொடர்ந்து கணக்கில் காட்டப்பட்டவாறிருந்தது.

**2.9 ஒப்பந்த நிர்வாகம்**

**2.9.1 நடைமுறைப்படுத்தப்படாத திட்டம்**

தாய், சேய் பராமரிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற ரூபா 42,110 உரிய நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாதிருந்தது.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) வருவாய் சேகரிப்பு

(ஆ) நிலையான சொத்துக்கள்

(இ) கணக்கீடு

(ஈ) நன்கொடை

(உ) நானாவித வைப்புகள்

(ஊ) வரவு செலவுத்திட்டம்